புத்தகம்-6 ;அத்தியாயம்-1

அன்று அருணின் நண்பி சாராவிற்கு பிறந்தநாள். அருண் முன்கூட்டியே அதை ஞாபகம் வைத்திருத்தான். தனது google காலன்டரில் குறித்து வைத்திருந்தான். தன் அம்மாவிடமும் சொல்லிவைத்திருத்தான் தன்னை ஞாபகப்படுத்த. எதுக்காக இப்படி எல்லாம் அவன் செய்யவேண்டும் என கேட்கீறீர்களா? எல்லாம் ஒரு பயத்தால் தான்.

சாராவிற்கு மட்டும் அருண் தனது பிறந்தநாளன்று அவளை wish பண்ண மறந்தாளோ, இல்லை அவளுக்கு பரிசு கொடுக்க மறந்தாளோ, அவ்வளவு தான், அருணை ஒரு உலுக்கு உலுக்கி விடுவாள். அருண் ஒரு முறை அனுபவப்பட்டிருக்கிறான். அதன் பிறகு அந்த மாதிரி அவன் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை.

பள்ளிக்கூடத்திற்கு ரெடியானான். காலைக்கடன்களை எல்லாம் கடகடவென்று முடித்தான். அவன் அம்மா கீதா ஒன்றும் சொல்லாமலே அவனே எல்லா வேளைகளையும் செய்து முடித்தான்.

“அருண், breakfast சாப்பிட்டாயா?” தன் அறையிலிருந்து கீழே இறங்கி சமையல் அறைப்பக்கம் வந்த உடனேயே அம்மா கீதா கேட்டார்.

“ஆச்சு.”

’”Lunch box?”’

“ஆச்சு.’ அருண் சற்று எரிச்சலோடு சொன்னான்.

“Home work submission?”

எப்போதும் போல அம்மா கீதாவிடமிருந்து கேள்விக்கனைகள் அடுத்து அடுத்து வந்து கொண்டிருந்தது. என்ன பண்ணுவது அம்மா அல்லவா. எல்லா அம்மாக்களுமே இப்படித்தான் என்று அருணுக்கு தெரியாதா என்ன? அருணும் எல்லாப் பசங்களைப் போல எதையாவது மறந்து விடுவான். ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

‘அருண்?’

அருண் breakfast சாப்பிட்டுக் கொண்டே மும்முரமாக அன்றைய செய்திதாள் படித்துக் கொண்டிருந்தான். வயது ஆக ஆக அருணும் பேச்சை குறைத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டான்.

அருணுக்கு விளையாட்டுச் செய்திகள் என்றால் உலகமே மறந்து போய்விடும். ஒரு பூகம்பமே வெடித்தாலும் அவனுக்கு கொஞ்சம் கூட பாதிப்பே இல்லாமல் படித்துக் கொண்டிருப்பான். அவன் பதில் அளிக்க வேண்டாம் என்று இருந்தான். எல்லாப் பசங்களைப் போலே அம்மா கத்தட்டும் என்று இருந்தான்.

கீதா பொறுமை இழந்தார். அவருக்கு அருணின் அலட்சியம் தாங்கமுடியவில்லை.

“அரூண்….’ இன்னும் சத்தமாக வந்தது அம்மாவின் குரல். அதற்க்கும் பதில் அளிக்காவிட்டால் வீடே அதிரும் போல திட்டு விழும். அப்பா ரமேக்ஷோ வெளியூர் போயிருப்பதால் அம்மாவை தடுப்பதற்கு யாருமே இல்லை.

‘என்ன அம்மா? என்ன வேணும்?’ அருண் எரிச்சலோடு கேட்டான்.

‘இன்னிக்கு என்ன நாள் தெரியுமா? ஞாபகம் இருக்கா?’

அம்மா எதைப்பற்றி கேட்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

‘சாராவோட பிறந்தநாள் அம்மா, எனக்கு நல்லாவே ஞாபகம் இருக்கு.’

‘என்ன gift கொடுக்கப் போற?’

‘Surprise, அம்மா. Surprise.’

‘நான் தெரிஞ்சிக்கலாமா? Please, just one peek.”

‘No அம்மா, no. It should be a total surprise.”

அம்மா தன் பள்ளிக்கூட பையை எடுத்துப்பார்க்க அவன் பக்கமாக வந்தாள். பையிக்குள் இருக்கும் பரிசுப்பொருளை பார்க்க விருப்புகிறாள் என்று அவன் அறிந்தான். ஒன்றுமே சொல்லாமல் ஒரு நமட்டுச் சிரிப்போடு உட்கார்ந்து இருந்தான். கைக் கடிகாரத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டான். பள்ளிக்கு இன்னும் நேரமாகவில்லை.

அம்மா கீதா மெதுவாக அருணின் பையை எடுத்து அதை திறந்தாள். அருண் எதுவும் மறுப்பு கூறாமல் அம்மாவை புன்சிரிப்போடு பார்த்தான். அம்மா பையைத் திறந்து பார்த்தாள். பரிசுப்பொருள் ஏதாவது இருக்கிறதா உள்ளே என்று தேடினாள். அருண் புன்னகையோடு உட்கார்ந்திருந்தான்.

கீதா அருணிடமிருந்து பதிலைப் பிடுங்க முயற்ச்சித்தார்.

‘ஆமாம் அருண், இந்த தடவையும் அதே பரிசா கொடுக்போற?’

‘எதே பரிசு?’ அருண் அம்மாவை சீண்டினான்.

‘அதான் பா, போன வருக்ஷம் கொடுத்தயே.’ கீதா அருணிடம் இருந்து பதில் வரவைக்க தன் யுக்திகளைக் கையாண்டார்.

’அம்மா, எனக்கு பள்ளிக்கூடம் போகனும். நேரமாச்சு.’

கீதா மீண்டும் தேடிப்பார்த்தார். ஒன்றுமே அகப்படவில்லை. சந்தேகத்தோடு அருணைப் பார்த்தார்.

‘நான் என்னோட பள்ளிக்கூட locker-ல பத்திரமா வச்சிருக்கேன். நான் தான் சொன்னேனே surprise அப்படின்னு.’

கீதாவிற்கு கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. அருண் இவ்வளவு ஏற்பாட்டோடு இருப்பான் என்று அவர் நினைத்துப் பார்க்கவில்லை. இருந்தாலும் தன் மகன் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதைப் பார்த்து அவர் பெருமைப் பட்டுக்கொண்டார்.

கீதா அடுத்து கேள்வி கேட்டுகும் முன்னர், பையைப் டபக்கென்று பிடுங்கிக்கொண்டு அருண் வாசல் கதவு நோக்கி நடந்தான்.

’அருண்...’

திரும்பவும் அம்மாவிடமிருந்து சத்தம் வந்தது. அருண் பட்டென்று பையைக் கீழே வைத்தான். உற்றென்று முகத்தை வைத்துக்கொண்டு ஒரு முறை விட்டான். பள்ளிக்கூடம் என்னதான் வீட்டின் பக்கத்தில் இருந்தாலும் சீக்கிரமாகச் சென்று நண்பர்களோடு விளையாடுவதில் ஒரு உற்சாகாம் எந்த சிறுவனுக்குத்தான் கிடையாது?

’என்ன இப்ப? நான் தான் சாராவுக்கு suprrise கொடுக்கப் போறேன்னு சொல்லிட்டேன்ல?’ ஒரு தடவை சொன்னா கேட்க மாட்டியா? என்னை பள்ளிக்கூடம் போற சமயத்தில ஏன் இப்படி படுத்தற?’ அருண் பொறிந்து தள்ளினான்.

கீதா மௌனமாக இருந்தார். சைகையினால் dining table பக்கம் கையைக் காட்டினார். அருண் சாப்பிட்ட தட்டு அப்படியே அங்கேயே இருந்தது. அருண் கவனிக்காத மாதிரி ஓடப்பார்த்தான். கீதா அவனைப் போகவிடாமல் தடுத்தார். அவர் கண்ணில் கண்டிப்பு இருந்தது. தான் அவனோடு விளையாடவில்லை என்பதை அவர் முகபாவம் சொன்னது.

அருண் தலையை தொங்கப் போட்டுக்கொண்டு கப்சிப்பென்று எதிர்ப்பு தெரிவிக்காமல் தான் சாப்பிட்ட தட்டை எடுத்து சமையல் அறை sink-ல் போட்டுவிட்டு வாசல் கதவு பக்கமாகப் போனான்.

அவன் தன் நண்பி சாராவிற்கு பெரிய surprise கொடுத்து அவளை மகிழ்விக்கப் போவதாக நினைத்துக்கொண்டிருந்தான். அன்று அவனுக்கு தெரியாது, தான் எவ்வளவு பெரிய shock-யை சந்திக்கப்போகிறோம் என்று.

---- முடிவு ---